Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3·00

# ஈழநாதம்


THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ ஆடி 13 ஆம் உ ஞாயிற்றுக்கிழமை (29 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 06 ஓசை 161


## அரிசி ஆலைக்குள் பதுக்கிய 83 சீனி மூடைகள் பிடிபட்டன

(கொழும்புத்துறை)

பூநகரிப் பகுதியில் பூநகரி பிரபல அரிசி ஆலை ஒன்றில் நெல் மூடைகளுக்குள் மறைத்து வைத்த எண்பத்திமூன்று சீனிமூடைகள் கைப்பற்றப்பட்டன. பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சீனி மூடைகளே இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. பூநகரி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப் (4 ஆம் பக்கம் பார்க்க)



நெல்லியடியில் கடந்த புதன்கிழமை இரவு ஸ்ரீ லங்கா போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில் மூவர் மாண்டனர். அவர்களின் சடலங்களை இங்கு உள்ள படங்களில் காணலாம்.



# கட்டைபறிச்சான் மோதலில் பதினைந்து இராணுவம் பலி!

## ஒரு வேங்கை வீரமரணம்; ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன!

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கட்டைபறிச்சான் என்ற இடத்தில் நெல் உத்தரவாத விலைத்திட்டக் களஞ்சியத்திலுள்ள சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் மீது முகாமிலிருந்து 75 யார் தூரத்தில் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் நடத்திய தாக்குதலில் பதினைந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப்புலிப் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களும் தகவல் தொடர்புச் சாதனங்களும் புலிகளால் மீட்கப்பட்டன.

கட்டைபறிச்சானைக் கைப்பற்றிவிட்டதாக சில வாரங்களுக்கு முன்னர் சிறிலங்கா அரசுஅறிவித்ததுடன் கட்டைபறிச்சான் மோதலில் நாற்பது கொமாண்டோக்கள் இறந்ததாகவும் அரசாங்கம் முன்னர் தெரிவித்திருந்தது.

கட்டைபறிச்சானில் நேற்று புலிகள் தாக்குதல் பற்றிய செய்தியை இந்திய வானொலி நேற்று நண்பகல் அறிவித்தது. இத்தாக்குதல்சம்பவம் நேற்று அதிகாலை ஆறுமணிக்கு நடந்தது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(கட்டைபறிச்சான்)

நேற்றுக் காலை கட்டைபறிச்சான் மோதலில் விடுதலைப் புலிகளால் இராணுவத்தினரிடம் இருந்து பலரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

எவ். என். சி ரக துப்பாக்கிகள் 10, அதற்கான மகசீன் 30 5.56 ரக ரவைகள் 1050, மினிரக எல். எம். ஜி ஒன்று, எஸ். எல். ஆர் ரக துப்பாக்கி மூன்று - மகசீன் ஆறு, சொட்கன் ஒன்று, நேட்டோ ரவை (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாபு வீரமரணம்

(கட்டைபறிச்சான்)

கட்டைபறிச்சானில் நேற்று நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் பாபு வீரமரணமடைந்தார். அவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துள்ளனர்.

## 14இராணுவம்பலி 7 பேர் காயம்

(கொழும்பு)

திருக்கோணமலை கட்டைபறிச்சான் என்னுமிடத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அரசப் படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் பதின்னான்கு படையினர் 4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரும்காடையரும் சேர்ந்து கடைகள் கொள்ளை

(வவுனியா)

வவுனியாவில் கடைகள் சிங்களக் காடையர்களாலும், ஸ்ரீ லங்கா இராணுவத்தினராலும் சூறையாடப்பட்டுள்ளன.

கடந்த 27ஆம் திகதி அன்று வவுனியா நகரிலுள்ள நூறு கடைகள் சிங்களக் காடையர்களாலும், இராணுவத்தினர்களாலும் முற்றுமுழுதாகக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. (ம)

## வவுனியா நகர்

## இராணுவ முகாம்கள் மீது புலிகள் தாக்குதல்கள்

(வவுனியா)

காமினி மகா வித்தியாலய இராணுவ முகாம் மீதும், ஜோசெப் இராணுவ முகாம் மீதும்விடுதலைப்புலிகள்ஷெல் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியா காமினி மகா வித்தியாலய இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேநேரம் வவுனியா ஜோசெப் இராணுவ முகாமிற்கும் விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர் சேதவிபரங்கள் தெரியவில்லை. (ம)

## வட, கிழக்கிற்கு இரு தலைமை போலிஸ் அதிகாரிகள்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு இரண்டு தலைமை பொலிஸ் அதிகாரிகள் வெவ்வேறாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கை அரசின் இந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (சா/தர) பரீட்சை முடிவில் சென்ஜோன்ஸ்முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் நேற்று வெளியான க.பொ.த.(சா,த) பரீட்சையில் சென்ஜோன்ஸ் கல்லூரியில் நால்வரும், வேம்படி மகளிர் கல்லூரியில் மூவரும், யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஒருவரும் எட்டுப் பாடங்களிலும் அதி விசேட சித்திகளைப் பெற்றுள்ளனர்.

சங்கீதம், நடனம் போன்ற பாடங்களின் செய்முறைப் பரீட்சையின் முடிவுகள் வரா (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரை பார்வையிட அரசாங்கக் குழுவுடன் தமிழ்க் குழுக்களும் வந்தன

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியைப் பார்வையிட வந்த அரசாங்கக் குழுவினருடன், இந்திய இராணுவத்தினருடன் தமிழ் பகுதிகளைவிட்டு வெளியேறிய தமிழ்க் குழுக்களும் வந்திருந்தன.

நேற்று முன் தினம் வவுனியா நகரைப் பார்வையிட வந்த அரசாங்கத் தரப்பினரில் சிறிலங்காப் பாதுகாப்பு இராஜாங்கஅமைச்சர்ரஞ்சன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுக் கப்பலில் பயணிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருட்களை ஏற்றி வரும் கப்பலில் எக்காரணம் கொண்டும் முன்பு கூறியிருந்ததுபோல் பயணிகள் எவரும் ஏற்றிச் செல்லப் படமாட்டார்கள் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் பயணிகளை கொழும்புக்கு அனுப்புவதற்கு என்று பிரத்தியேகமாக ஒரு பயணி (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தீர்வு முடியாதாம்

(மாலே)

"வடக்கு, கிழக்குப் பிரச்சினைகளுக்கு இராணுவ நடவடிக்கைகள் மூலம் நிரந்தர தீர்வு காண முடியாது" என்று பிரதமர் டி. பி. விஜேதுங்க மாலைதீவில் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

## இயக்குனர் சபை கூட்டம்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமகச இயக்குனர் சபைக்கூட்டம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாணசபை எழுதுவினைஞர் வெற்றிடங்கள் நிரப்பல்

(கொழும்பு)

அரசாங்க சேவை மாகாண நிர்வாக சேவை என்பவற்றில் உள்ள எழுது வினைஞர்களுக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

எழுது வினைஞர்களுக்கு சுருக்கெழுத்து, தட்டெழுத்து போட்டிப் பரீட்சையும் நடத்தப்படவுள்ளன.

18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட க.பொ.த. (சா) தர பரீட்சையில் மொழி, இலக்கியம், கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் தோற்றி சித்தி பெற்றிருக்க வேண்டும்.

இது தொடர்பான அரசாங்க வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி நேசமணி இராசையா

பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த நேசமணி இராசையா காலமானார். இவர் காலஞ் சென்ற புறொக்டர் இராசையாவின் (கொட்டடி) அன்பு மனைவியும், சாவித்திரி, பரிமேலழகன் (லண்டன்), நித்தியானந்தன் (கணக்காளர் இ. போ. ச. கோண்டாவில்), ஸ்ரீரங்கன் (கணக்காளர் கல்வித்திணைக்களம் மட்டக்களப்பு), சத்தியபாமா, ஜனகன், ஜெயராணி, ஜனக்குமார் (அசோகா ஜுவல்ர்ஸ் உரிமையாளரும் ரியுஷன் ஆசிரியரும்), சிவக்குமாரி, விஜயகுமாரி, காலஞ்சென்ற அசோக், இளமுருகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சபாநந்தன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்), வசந்தி (லண்டன்), ஜமுனகுமாரி (இ. போ. ச. கோண்டாவில்), இந்திரா, சுமதி (லண்டன்), ஸ்ரீநிவாசன், ஸ்ரீதயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வடக்கு அராலி முருகமூர்த்தி ஆலயத்திற்கும், அராலி தேவாலயத்திற்கும் அருகில் இருக்கும் அன்னாரின் தற்போதைய இல்லத்திலிருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அராலி வடக்கு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
ஜனக்குமார்
(அசோகா ஜுவலர்ஸ்)

(R- 552)

## பாண் விநியோகத்தில் மோசடி

(யாழ்ப்பாணம்)

பாண் விநியோகிப்பதில் சில இடங்களில் மோசடிகள் நடை பெறுவதாகப் பாண் பாவனையாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினத்தில் இருந்து குடும்ப அட்டை ஒன்றுக்கு ஒரு றாத்தல்பாண் என்ற அடிப்படையில் சனசமூக நிலையங்களில் வைத்து விநியோகிக்கப்படுகிறது.

சில இடங்களில் பாண் விநியோகிப்பவர்கள் தமக்கு வேண்டியவர்கள், வரும்சமயங்களில் ஒரு அட்டைக்கு ஒரு றாத்தல் வழங்குவதாகவும் தமக்கு வேண்டியவர்கள் வராதபோது ஒரு குடும்பத்திற்கு ஒரு றாத்தல் வழங்குவதாகவும் பாவனையாளர்கள்தெரிவித்துள்ளனர்.

மேலும் சில இடங்களில் விநியோகிஸ்தர்கள் தமக்கு கூடுதலாக எடுத்து வைத்துக் கொண்டு பாண் இருக்கும் போதே முடிந்து விட்டதாகக் கூறி விடுவதாகவும் பாவனையாளர்கள் கூறினர். (ம)

# மனித உரிமை மீறலுக்கு ஊழியர் சங்கம் கண்டனம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்கா பேரினவாத அரசினால் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக பிரகடனப்படுத்தியுள்ள யுத்தத்தினால் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது சொத்துக்களையும், உடமைகளையும், உறவினர்களையும், இழந்து அகதிகளாக உள்நாட்டிலும், தமிழ் நாட்டிலும் தஞ்சம் புகுந்துள்ளதோடு விமானக்குண்டு வீச்சினால் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் உயிர்களை இழந்தும் அங்கவீனர்களாயும் உள்ளனர். அத்தோடு மருத்துவ வசதி சீர்குலைந்துள்ள வேளையில் கொடிய கிருமியைப்பரப்பும் இரசாயனக் குண்டுகளை விமானத்திலிருந்து ஏவியும் திட்டமிட்டு மக்களை பூண்டோடழிக்க அரசு கங்கணம கட்டியுள்ள நிலையையும் வடக்கு, கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபின் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதார தடையையும் எமது தொழிற்சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

இத்தீர்மானம் தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் தொழிற்சங்கத்தின் 1990. 07. 27 ஆந் திகதிய விசேட கூட்டத்தில் கண்டனத் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

## பாண் இல்லை கேக் உண்டு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு சங்கங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட சில பேக்கரிகளுக்கு வழங்கப்படும் மாவில் பெரும் பகுதியானவை கேக், பணிஸ், பட்டர்பாண் போன்ற லாபகரமான தயாரிப்புகளுக்கே பயன்படுத்தப் படுகிறது. பேக்கரியில் மக்கள் பாண் கேட்டால் கேக், பணிஸ் இருப்பதாக கூறப் படுகிறது.

இது பிரான்சிய அரசி, பாண் கேட்ட மக்களுக்கு கேக்கை சாப்பிடும்படி கூறியதனைப் போலுள்ளது. மக்கள் மிகவும் ஆத்திரங்கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். பேக்கரிகளுக்கு மா வழங்கப்படும்போது தனியே பாண் உற்பத்திக்கு மாத்திரம் என்ற நிபந்தனையுடன் விநியோகிக்கப்பட வேண்டுமென மக்கள் பேசிக்கொள்கின்றார்கள்.

## மோகன் வீரமரணம் மக்கள் அஞ்சலி

(வடமராட்சி)

கிளிநொச்சியில் நிகழ்ந்த நேரடி மோதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த திருக்கோணமலையைச் சேர்ந்த வீரவேங்கை மோகன் வீரமரணமடைந்துள்ளார்.

அன்னாரின் புகழுடம்பு நெல்லியடியிலுள்ள மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஊர்வலமாக வதிரி ஆலம்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அன்னாரின் புகழுடம்புக்கு அஞ்சலி செலுத்த பெருந்திரளான பொதுமக்கள் வருகை தந்திருந்தனர். (18)


தமிழீழ மண்ணின்
சுதந்திர விடியலுக்காக....
களப்பலியான
வீரவேங்கைகளுக்கு
எமது அஞ்சலிகள்....
அவர்கள் வழியில்....
அனைவரும் இணைவோம்
தாயக தாகம்
தணித்திட எழுவோம்....



மல்ரி ஒயில்
ஊழியர்கள்
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(B.1295)

## சிந்தனைக்கு

பாதுகாப்புடனும் சுதந்திரத்துடனும் கூடிய தனிமனிதனின் நல்வாழ்வே, அரசியல்முயற்சி அனைத்துக்கும் குறிக்கோள்.

– தாக் ஹேமர்ஷோல்ட்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 29-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# யுத்த நிறுத்தமல்ல தீர்வே தேவை

மீண்டும் யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கவில்லை, முனகலாகக் கேட்கிறது!

பேச்சுவார்த்தை என்றும் மாநாடு என்றும் சர்வகட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு என்றெல்லாம் கடந்த பல வருடங்களாகக் காலம் கடத்தி வந்ததன் விளைவுதான் இன்றைய யுத்தம்.

யுத்தம் வந்தபின் யுத்தநிறுத்தம் என்று பேசுவதைவிட யுத்தம் வராமலே இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட்டிருந்தால் இன்று யுத்தம் மூண்டிருக்காது.

இதற்கு முன்னரும் யுத்தம் மூண்டபோது யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. யுத்த நிறுத்தம் அடுத்த தாக்குதலுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் கால அவகாசமாகவே கருதப்பட்டது.

இப்பொழுது மீண்டும் யுத்தம் நிறுத்தப்பட்டால் தங்கள் இருப்பிடங்களிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினதும்சிங்களக்காடையர்களினதும் அட்டூழியங்களுக்குத் தப்பி தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அகதிகளாக இடம்பெயர்ந்து சென்ற தமிழ் மக்கள் மீண்டும் தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்வார்கள்.

மீண்டும் தாக்குதல் தொடங்கியதும் முன்னர் ஏற்பட்ட இழப்புக்களில் எஞ்சியவற்றையும் இழக்க வேண்டியேற்படுமே தவிர நிம்மதியாக நிரந்தரமாகத் தமது சொந்த மண்ணில் வாழும் நிலை ஏற்படாது. எனவே யுத்த நிறுத்தம் என்பது நிரந்தரமானதாக ஏற்படுவதற்கு வழிவகுத்தாலொழிய யுத்த நிறுத்தம் என்று பேசுவதில் அர்த்தமில்லை.

யுத்தநிறுத்தம் நிரந்தரமானதாக அமைய வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான திட்டங்களைக் கடந்த காலத்தில் நடந்த பேச்சுக்களிலிருந்து உறுதியாகத் தயாரித்து காலம் கடத்தாத முறையில் துரிதமாக ஒரு தீர்வுக்கு வரவேண்டியது அவசியம்.

தமிழ் மக்களை தமிழ்த் தேசிய இனமாக அங்கீகரிப்பதும், வடக்குக் கிழக்கு மாகாணத்தைத் தமிழ் இனத்தின் தாயகமாகவும் அங்கீகரிக்கப்படல் வேண்டும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு வழி சமைக்கப்பட வேண்டும்.

இலங்கை துண்டாடப்படாமல் இருக்கவேண்டுமானால் ஒரு சமஷ்டிக் குடியரசாக மாற்றுவதுதான் இங்கு இன்றுள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் உள்ள ஒரே வழி.

இதைப் பற்றிக் கடந்த காலங்களில் வாதப் பிரதிவாதங்களேற்பட்டு முடிந்துவிட்டன. இனி இதற்கு நேரமில்லை.

இன அழிப்புக்கு நியாயம் காட்டுவதற்காக எதிர்க் கட்சிகள் இப்போது ஒன்றிணைந்து வெளி நாடுகளுக்குத் தூது செல்ல முடியுமானால் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கும் எதிர்க் கட்சிகள் ஒன்றுபட முடியாதா?

இராணுவத் தீர்வுதான் ஒரேவழி என்ற சிறிமா அம்மையாரின் வழியையே பிரேமதாசா அரசும் பின்பற்றுமானால் அழிவது தமிழினம் மட்டுமல்ல சிங்கள இனமும்தான் என்பதை உணர்ந்துகொள்வது அவசியம்.

# தமிழீழத்தில் போர்க்கால விவசாய உற்பத்தி அபிவிருத்தித் திட்டம்

### வீட்டுத்தோட்டத்தைப் பராமரித்தல்

### நீர்ப்பாசனம்

கிடைக்கும் கழிவு நீரை முறையாகப் பயன்படுத்தல் வேண்டும். அதாவது குளியல் அறை சமையல் அறை கழிவு நீர் தினமும் பகுதிபகுதியாக பாய்ச்சப்படுதல் வேண்டும். இக் கழிவு நீர் பயிர்களுக்குபோதாது உள்ளவேளைகளில் மட்டும் சிறிதளவு தேவையான நீரைக் கிணற்றிலிருந்து வாளிகள் மூலமோ அல்லது வேறுவழிகள் மூலமோ பாய்ச்சலாம்.

### பசளையிடுதல்

இன்றைய காலகட்டத்தில் நாம் இரசாயன உரவகைகளை நம்பியிருக்கமுடியாது. ஆகவே இயற்கை உரங்களை பயன்படுதத வேண்டும். இவற்றை நாம் தினமும் கழிவுகளிலிருந்து கூட்டெரு தயாரிப்பதன் மூலம் பெறலாம். நாம் தயாரித்த கூட்டெருவை ஒருசதுர மீற்றர் 5கிலோ வீதம் அடி உரமாக இடலாம்.

### கூட்டெரு தயாரிக்கும் முறை

தோட்டத்திற்கு தேவையான கூட்டெருவை நாங்களே தயாரித்துக் கொள்ளலாம். பயிர்களின் கழிவு, விலங்குகளின் கழிவு. வீட்டின் கழிவு, சாம்பல் ஆகியவற்றை உக்க (இறக்க) வைத்துத் தயாரித்தல் வேண்டும். கூட்டெரு மண்ணின் வளத்தைக் கூட்டுவதோடு மண்ணையும் பாதுகாக்கின்றது.

குறுகிய காலத்தில் கூட்டெரு தயாரிப்பதற்கு தேவைப்படும் பொருட்களும் அவற்றின் உச்ச அளவுகளும் கீழே கொடுக்கப்படுகின்றன.

இலை, குழை, குப்பைகள் 75வீதம் பச்சைச் சாணம் 10 வீதம் குசினிச்சாம்பல் 50 வீதம் உக்கிய கூட்டெரு 10 வீதம் சிறுநீர் ஊறியமண் 01-02 வீதம் மேல்மண் சிறிதளவு.

### செய்கை முறை

இலை, குழை, குப்பை கூழங்களில் உள்ள ஈயத்தாள் பொலித்தீன் ஆகியவற்றினை அகற்றிய பின் சிறு கழிவுப் பொருட்களை சிறு துண்டுகளாக வெட்டவும். இவையாவும் சிறுநீர்மண், உக்கிய எரு, சாம்பல் ஆகியவற்றுடன் நன்கு கலக்கப்பட்டு 12'' உயரப்படைகளால் இடப்படுதல் வேண்டும். அதன் மேல் கரைத்த சாணக நீர் இடவும் இப்படிப்படையாக இட்டு 8—10 படைகள் இட்டபின் குவியல் தயாரிக்கவும் ஒரே தினத்தில் குவியல் தயாரித்தல் வேண்டும். இறுதியில் மேல் மண்ணால் குவியலை மூடவும்.

### முதலாம் முறைபுரட்டுதல்

தயாரித்த இரு தினங்களின் பின் நடுவில் உள்ள குப்பை வெளியில் வருமாறும் வெளி உள்ளவை உள்ளே செல்லுமாறும் நன்கு புரட்டவும். சிறு நீர் எரு மண் கலந்த நீர் ஊற்றி மீண்டும் குவிக்கவும்.

### இரண்டாம் முறை புரட்டுதல்

6 நாட்களின் பின் சிறு நீர் மண் கலந்த நீர் ஊற்றி மேற் கூறியவாறு புரட்டி மீண்டும் குவிக்கவும்.

### மூன்றாம் முறை புரட்டுதல்

10 நாட்களின் பின் மேற் கூறியவாறு புரட்டிக் குவித்து மரச்சாம்பல் கலந்த நீரை ஊற்றவும்.

### நான்காம் முறை புரட்டுதல்

12 நாட்களின் பின் மீண்டும் ஒருமுறை புரட்டிக் குவித்து மரச்சாம்பல் கலந்த நீரை ஊற்றவும்.

இவ்வாறு செய்து 2 கிழமைகளின் பின் நாம் இவ்வுரத்தை தோட்டத்தில் இடலாம். ஆக ஒரு மாத காலத்துள் சிறந்த கூட்டெருவை நாம் தயாரித்துக் கொள்ள முடியும்.

முடிவாக தமிழீழத்தின் விவசாயிகள் அனைவரும் பண வருவாயை நோக்கமாகக் கொண்டு பயிரிடும் பணப் பயிர்களை உற்பத்தி செய்வதை உடன் நிறுத்தி குறுகிய காலத்தில் பயன்தரும் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டும். வீட்டில் கிடைக்கும் நிலங்கள் அனைத்தும் தமிழீழ மக்கள் அனைவராலும் வீட்டுத் தோட்டத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும். இவற்றின் மூலம் எம்மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார உணவுத் தடையை நாம் உடைத்தெறிய முடியும் என தமிழீழ ஆய்வு நிறுவனம் மக்களை கேட்டுக்கொள்கிறது. ★

# லைபீரியத்தலைநகர் கிளர்ச்சியாளரிடம் வீழ்ச்சி

(லைபீரியா)

லைபீரியாவின் தலைநகர் மன்ரொலியாவைக் கிளர்ச்சிப் படைகள் கைப்பற்றிவிட்டதாக பி. பி. ஸி அறிவித்தது. லைபீரியா ஜனாதிபதி சாமுவேல் டோவ் கிளர்ச்சியாளர்களால் விரட்டப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளர்ச்சித்தலைவர் சாள்ஸ் கெய்ஸர் வானொலியில் உரையாற்றினார் என்றும் அவர் ஜனாதிபதி சாமுவேல் டோவ் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டு விட்டதாகவும் தெரிவித்துள்ளதோடு இரவு ஊரடங்கு நாட்டில் உள்ளதென்றும் மக்கள் பதட்டமடையத் தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளார் எனவும் பி.பி.ஸி தெரிவித்துள்ளது.

மேலும் கிளர்ச்சிப்படைகள் நகருக்குள் பிரவேசித்ததும் இராணுவத்தினர் சீருடைகளைக் கழற்றி விட்டு துப்பாக்கிகளை எறிந்து விட்டு ஓடியதாகவும் தெரிவித்தது. அத்தோடு தூதுவராலயப் பகுதியில் கடும்சண்டை நடைபெற்றதாகவும் தெரிவித்தது. அத்தோடு கிளர்ச்சிப் படையினர் தலைநகர் விமான நிலையத்தை மூடியுள்ளதாகவும் தெரிவித்தது.

# அமெரிக்கா - ஈராக் மீது பொருளாதாரத் தடை

(வாஷிங்டன்)

அமெரிக்க காங்கிரஸ் ஈராக் மீது பொருளதாரத் தடையை விதித்துள்ளது இதனால் விவசாயப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக ஈராக்கிற்கு கிடைக்கவிருந்த 120 கோடி டாலர் உதவி ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

குவைத்தையும், ஐக்கிய அரபு எமிரேட்டுகளையும் ஈராக் மிரட்டியதைத் தொடர்ந்தே இத் தடை விதிக்கப்படுவதாக தெரிகின்றது.

அமெரிக்காவின் இரு சபைகளிலும் ஈராக்கின் மீதான தடை பெரும்பாலானோரின் வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

# பிரதமர் உட்பட பலர் முற்றுகை

(போட்ஒவ்ஸ்பெயின்)

ரினிடாட் பிரதம மந்திரி ரொபின்சிங் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவிரவாத முஸ்லிம் குழு ஒன்றுனால் பாராளுமன்ற கட்டடத்திற்குள் முற்றுகையிடப்பட்டுள்ளனர்.

இம் முற்றுகையில் இராணுவத்தினருக்குத் தொடர்பில்லை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டம்

# ஆசிரியர் யூலை மாதத்திற்குரிய கட்டு நிதி கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் யூன் மாதச் சம்பளம் யூன்மாதம் 21 ஆம் திகதியே தாராபுரத்தில் வைத்து வழங்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதுவரை யூன்மாதத்திற்குரிய சம்பளக் காசோலையை பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள் தத்தமது அதிபர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளவும்.

மேலும் யூலை மாதத்திற்குரிய கட்டு நிதி இதுவரை கிடைக்கப்பெறாததால் யூலை மாதச்சம்பளம் வழங்க முடியவில்லை. இதற்குரிய கட்டு நிதியை மன்னார் அரசாங்க அதிபர் கடனாக வழங்கும் பட்சத்தில் யூலை மாதச் சம்பளம் எதிர்வரும் திங்கட்கிழமை வழங்கப்படும் என மன்னார் கல்வித் திணைக்களக்கணக்காளர் தெரிவித்துள்ளார். (ம)

# போர்ப்பயிற்சிக்கு அழைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் போர்ப் பயிற்சிக்கு பொதுமக்கள் அழைக்கப்பட்டனர்.

நேற்று தென்மராட்சிப் பகுதியில் வாழும் மக்களுக்கு போர்ப் பயிற்சி வழங்கும் முகமாக இருபத்தைந்தும் அதற்கு மேற்பட்ட வயதை உடைய ஆண்களை குறிப்பிட்ட ஓர் இடத்துக்கு அழைக்கப்பட்டு அங்கு போர்ப்பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (லோ)

# இன்று இலக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளரும் மூத்தபத்திரிகையாளருமான (சசிபாரதி) சு.சபாரத்தினத்தின் 60ஆவது வயது பூர்த்தியாவதையொட்டி, இலக்கிய சந்திப்பு நிகழ்ச்சி இன்று காலை நடைபெறவுள்ளது.

நல்லைஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவிருக்கும் இச்சந்திப்பில், பல இலக்கிய கர்த்தாக்களும் பத்திரிகையாளர்களும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

# இன்று ஆலோசனைக் கூட்டம்

வவுனியா இலங்கை வங்கியின் பிரதேச அலுவலகத்திலும் வவுனியாக் கிளையிலும் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களையும், ஏனைய ஊழியர்களையும் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் நடைபெறவுள்ள ஆலோசனைக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு இலங்கை வங்கிவன்னிப் பிராந்திய முகாமையாளர் திரு. ந. சிவன் கேட்டுக் கொள்கிறார்.

# மத்தியமாநில அரசுகளை கண்டித்து சென்னையில் உண்ணாவிரதம்!

## முன்னாள் அமைச்சர்கள், மக்கள் கலந்து கொண்டனர்

(சென்னை)

சிறிலங்கா அரச படையினரால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த இந்திய மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று கண்டனம் தெரிவிக்கும் வகையில் தமிழக முன்னாள் அமைச்சர், திரு. திருநாவுக்கரசு தலைமையில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டமொன்று சென்னையில் நடத்தப்பட்டது.

ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த உண்ணாவிரதத்தில் முன்னாள் அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும், தமிழகம் வந்துள்ள அகதிகளைச் சரியான முறையில் கண்காணிக்கவும் மத்திய மாநில அரசுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நேற்றும் 800 அகதிகள்

வடக்குக் கிழக்கிலிருந்து 800 அகதிகள் 25 படகுகளில் நேற்று இராமேஸ்வரம் சேர்ந்ததாகவும், இவர்கள் காமராஜர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டபம் முகாமிலிருந்தும், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்தும் அடுத்த இரு நாட்களில் 2 ஆயிரம் அகதிகள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



இழப்புகளின் பின்னும் இருகுழந்தைகளையும் காப்பாற்றித்தமிழ் நாட்டுக்கு அகதியாய்ப் போய்ச்சேர்ந்த ஒருதாய் சோகமே உருவாக அமர்ந்திருக்கிறார்.

## பிரிந்துபோன அகதிகளை ஒன்றிணைக்கும் முயற்சி

(இராமேஸ்வரம்)

பிரிந்துபோய்க்கிடக்கும் இலங்கைத் தமிழ்க் குடும்பங்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அகதிகள் மறுவாழ்வு இயக்குனர் திரு. இராமதாஸ் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் அனைத்து முகாம்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதாக செய்தியாளர்கள் மத்தியில் கூறிய திரு, இராமதாஸ் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளை ஒழுங்கு படுத்தும் வகையில் பதிவு வேலைகள் மேற்பட்டு வருவதாகக் கூறியதுடன்; தற்பொழுது தமிழக முகாம்களில் அகதிகளாகத் தங்கியுள்ளவர்களுக்குப் பிறந்துள்ள குழந்தைகளுக்கு இந்தியப் பிரஜைகளாகும் வாய்ப்புக் கிடைத்துள்ளதென்றும் தெரிவித்தார்.

## அகதிகள் பற்றி தகவல் இல்லை

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் சென்ற அகதிகள் படகொன்று இலங்கை கடற்படையினரால் நடுக்கடலில் வைத்து தாக்கப்பட்டுள்ளது. இப்படகில் நாற்பத்தெட்டுபேர் சென்றுள்ளனர். ஏனைய விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## வேலியேபயிரை மேய்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பெறுமதிமிக்க மருந்து வகைகளைக் களவாடிய வைத்தியசாலை ஊழியர் விடுதலைப்புலிகளால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

போதனா வைத்தியசாலையில் அட்டென்டராகக் கடமையாற்றும் பொன்னையா அப்பாத்துரை என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். இவர் மானிப்பாய் பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் விசாரணையின் முடிவில் பதினையாயிரம் ரூபா தண்டமாகச் செலுத்தினார். (மு)

## மாணவரின் அவசரக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்பேசும் மாணவர் ஒன்றியத்தின் அவசர ஆலோசனைக் கூட்டம் நாளைகாலை ஒன்பது மணிக்கு நல்லூர் ஆலய பின்வீதியிலுள்ள மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல பாடசாலைகளின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது.

செவ்வாய் காலை பத்து மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள கூட்டத்தில் தென்மராட்சிப் பகுதியில் க. பொ. த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களையும் சமுகமளிக்குமாறு மாணவர் ஒன்றியத்தினர் வேண்டுகின்றனர். (மு)

## ஹெலி தாக்கி மின்மானி சேதம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை சுன்னாகம் மின்சார நிலையப் பகுதியில் ''ஹெலி'' தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் பாரிய 132/3 கே. வி. மின்மாற்றியும், வேறு பல உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

சேதமடைந்துள்ள இந்த மின்மாற்றியைத் திருத்துவதற்கான உதிரிப் பாகங்களை இங்கு பெற முடியாதுள்ளது என மேற்படி மின் நிலையத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக மாணவிகள் சேவை

யாழ். பல்கலைக்கழகமாணவிகள் காயப்பட்ட போராளிகள் தங்கிச் சிகிச்சை பெற்று வரும்மருத்துவமனைகளுக்குச் சென்று விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினருடன் இணைந்து போராளிகளுக்கு சேவையாற்றி வருகின்றனர். இதேவேளை பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினருடன் இணைந்துகாயமடையும் போராளிகளுக்கு உடனடிச் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

## 61 ஆயிரம் மாணவர் உயர் கல்வித்தகுதி

(கொழும்பு)

தற்பொழுது வெளிவந்துள்ள க. பொ. த. (சாதாரண) பரீட்சை முடிவுகளின் படி 61 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் உயர் கல்வி பெறும் தகுதி பெற்றுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தபால் அலுவலக நேர மாற்றம்

(கொழும்புத்துறை)

யாழ். பிரதம தபால் அலுவலகம் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை கருதி அலுவலகவேலைநேரம்காலை 9மணி முதல் 12 மணி வரையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற நிலை ஏற்படுமாயின் யாழ். பிரதம தபாலகம் இயங்க முடியாது மூடப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (24)

## பலாலியில் இராணுவம் பலி

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாம் மீதுதமிழீழவிடுதலைப்புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டதாக அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சிரேஷ்ட பொது அறையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணிக்கு இன்றைய நெருக்கடி பற்றி முக்கிய கலந்துரையாடல் ஒன்றுநடைபெறவிருக்கிறது. இதில் சகலரையும் கலந்துகொள்ளுமாறு பல்கலைக் கழக ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

## லியோ சாரணர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்தியகல்லூரிலியோ உறுப்பினர்கள், சாரணர்கள் உயர்தர மாணவர்கள் ஆகியோரைக் கொண்ட கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## வி. பி. சிங் கருணாநிதி சந்திப்பு

(டில்லி)

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இந்திப் பிரதமர் திரு. வி.பி. சிங்கை டில்லியில் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பின் போது இலங்கைத் தமிழர் நிலைமைகள் குறித்து தமிழக முதல்வரால் பிரதமர் சிங்குக்கு எடுத்துரைக்கப்படுமென்று நம்பிக்கையான வட்டாரங்களின் மூலம் தெரிய வந்துள்ளது.

## கோட்டங்களுக்கு சம்பளம் அனுப்பப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டஆசிரியர்களுக்கான ஜூன், ஜூலைமாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இக் கொடுப்பனவுகள் பாடசாலை அதிபர்களினூடாக ஆசிரியர்களுக்கு நாளை திங்கட்கிழமை வழங்கப்படும் எனவும் யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதில் ஜூன் மாதச்சம்பளம் முழுமையாகவும் வழங்கப்படும். ஜூலை மாதச் சம்பளத்தில் முன்னர் வழங்கிய சம்பள முற்பணம் ஆயிரம் ரூபா கழிக்கப்பட்டே வழங்கப்படும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர், ஆசிரிய மாணவர்கள், கல்வித்திணைக்கள ஊழியர்கள், பாடசாலை ஊழியர்கள் ஆகியோருக்கும் சம்பளக் கொடுப்பனவுகள் திங்கட்கிழமை கிடைக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு)

## அகதிகளுக்கு இந்து மாணவர் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உதவும் முகமாகச் சேகரித்து பணமாக ரூபா 18,130/= (பதினெட்டாயிரத்திநூற்றி முப்பது)வும், ஐந்து மூடை உடுபுடைவையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் (T.R.O.) ஒப்படைத்துள்ளனர்.

### வடக்கு, கிழக்கில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நியமனமானது 1987ஆம் ஆண்டு இந்திய, இலங்கை ஒப்பந்தத்திற்கு மாறானதென்றும், தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு, கிழக்கை இரண்டாக பிரிப்பதற்கான ஒரு நடவடிக்கை என்றும் இந்திய தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### 14 இராணுவத்தினர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டதாகவும், ஏழுபேர் காயமடைந்ததாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக இந்திய வானொலி அறிவித்தது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நடாத்திய இன்னுமொரு தாக்குதலில் இரண்டு சிங்கள சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகவும்மூன்றுபேர்காயமடைந்ததாகவும் அச்செய்தி தெரிவித்தது.

### க. பொ. த.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையால் அப்பாடங்களில் தோற்றியோருக்கு ஏழுபாடங்களின் முடிவுகளே கிடைத்துள்ளன.

ஏழுபாடங்களில் அதிவிசேட சித்திகள் யாழ். இந்துக்கல்லூரியில் ஏழுபேரும், சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஏழு பேரும், யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நான்கு பேரும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இரண்டுபேரும்,யாழ். மத்திய கல்லூரி கன்னியர் மடம் (ஆங்கிலம்) ஆகியவற்றில் முறையே ஒருவரும் பெற்றுள்ளனர்.

ஆறுபாடங்களில் சென் ஜோன்ஸ் கல்லூரியில் பதின் நான்கு பேரும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் ஏழு பேரும், இந்து மகளிரில் எட்டுப் பேரும், வேம்படி மகளிர்கல்லூரியில் ஏழுபேரும் பெற்றுள்ளனர். (மு)

### உணவுக் கப்பலில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் கப்பல் ஒழுங்கு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த உணவுக் கப்பல் முல்லைத்தீவில் உணவுப் பொருட்களை இறக்குவதில் ஏற்படும் தாமதம் காரணமாகவே யாழ். வர தாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும் இக்கப்பல் இன்று வந்தாலும் பொருள்களை திங்கட்கிழமையே இறக்கப்படும். இதனால் கொழும்புக்கான தபால் சேகரிப்புகளை தாராளமாக திங்கட்கிழமை வரை செய்யலாம் என்று யாழ். செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது (ம)

### கைப்பற்றப்பட்ட

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் 120,தொலைத் தொடர்பு சாதனம் ஒன்று, தலைக்கவசம் ஒன்று, ஜே.ஆர் ரக கைக்குண்டுகள் ஆறு என்பன புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாகும்.

### அரசாங்கக்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஜயரட்னா, திருமதி ஹேமா பிரேமதாஸா, ராஜாங்கக் கல்வி அமைச்சர் ராஜமனோகரிபுலேந்திரனாகியோருடன் ரெலோ குழுவைச் சேர்ந்தசெல்வம்ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவைச் சேர்ந்த இராகுலேஸ்வரன், புளொட் குழுவைச் சேர்ந்த மாணிக்க தாசன், செந்தில் ஆகியோரும் வந்திருந்தனர்.

### அரிசி ஆலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் திரு. எஸ். சாம் அவர்களால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு, இச் சீனி பொது மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (24)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.